Maahanmuuttovirasto
Migrationsverket
Finnish Immigration Service

# வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தின் பிரகாரம் வதிவிடஅனுமதி அல்லது சான்றிதழ்

வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தாலும் குறிப்பிடத்தக்க சுரண்டலாலும் பாதிக்கப்பட்டவராயின், உங்களுக்கு பின்லாந்தில் வதிவிடவுரிமையும் வேலை செய்வதற்கான அனுமதியும் இருப்பின் நீங்கள், அனுமதி நீடிப்பை அல்லது சான்றிதழைப் பரந்துபட்ட தொழில்களுக்காகவும், வேலைவழங்குனரை மாற்றம் செய்வதற்கான அனுமதிக்காகவும் விண்ணப்பிக்கமுடியும்.

நீங்கள் பருவகாலப் பணிஅனுமதியுடன் அல்லது வதிவிட உரிமையின்றி பணிபுரிந்திருப்பின், அனுமதி அல்லது சான்றிதழுக்கு விண்ணப்பிக்க முடியாது.

உங்களுக்கு வேலைவழங்குனரின் சுரண்டலால் அல்லது துஷ்பிரயோகத்தினால் நீடித்தஅனுமதி அல்லது சான்றிதழ் வழங்கப்பட்டால், நீங்கள் எந்த விதமான தொழில்களிலும் தொழில்புரிய முடியும். அத்துடன் உங்களுக்கு வரையறுக்கப்படாத வேலைக்குரிய அனுமதியும் வழங்கப்படும்.

## வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தின் பிரகாரம் அனுமதி நீடிப்புக்கு அல்லது சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும்

### தற்போதையவதிவிட அனுமதி காலாவதியாகும் போதும், புதிய வேலைவழங்குனர் பற்றித் தெரியாத போதும், அனுமதி நீடிப்புக்கு விண்ணப்பிக்கவும்

அனுமதி நீடிப்பானது வேலை தேடுவதற்கும் அல்லது வணிக நடவடிக்கைகளுக்காகவும் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும். அதன் செல்லுபடியாகும் காலமானது முந்தைய வதிவிட அனுமதி காலாவதியாகும் நாளிலிருந்தே ஆரம்பமாகும். வேலை வழங்குனரின் துஷ்பிரயோகத்தின் பிரகாரமான அனுமதி நீடிப்புவிண்ணப்ப அறிவுறுத்தல்களை வாசிக்கவும் வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தின் காரணமாக தொடர்அனுமதிக்கான விண்ணப்ப படிமுறை வழிகாட்டி.

### உங்களுக்குச் செல்லுபடியாகும் வதிவிடவுரிமையும் புதிய வேலைவழங்குனரும் இருப்பின், சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும்

சான்றிதழானது பரந்துபட்ட வேலைகளைச் செய்வற்கான சாத்தியத்தையும், முந்தைய வேலைவழங்குனரின் பணியிலிருந்து விலகிச் சென்று புதிய வேலைவழங்குனரின் கீழ் வேலையை ஆரம்பிக்கவும் உதவும். வேலை வழங்குனரின் துஷ்பிரயோகத்தின் பிரகாரமான சான்றிதழுக்கான விண்ணப்ப அறிவுறுத்தல்களை வாசிக்கவும். வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தின் காரணமாக சான்றிதழுக்கான விண்ணப்ப படிமுறை வழிகாட்டி.

## வேலைவழங்குனரின் குறிப்பிடத்தக்க சுரண்டலும் துஷ்பிரயோகமும் எவற்றைக் குறிக்கும் உதாரணமாக குறிப்பிடத்தக்கவை,

- உங்களுக்குரிய வேலை நேரத்தை விட நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியிருத்தல்
- வேலைவழங்குனர் உங்களுக்கு வேலை ஒப்பந்தத்தின்படி சம்பளம் வழங்காமலிருத்தல்
- வேலைவழங்குனர் உங்களதும் உங்களுடைய நெருங்கியவர்களினதும் உயிருக்கு அல்லது ஆரோக்கியத்துக்கு அச்சுறுத்தும் பட்சத்தில்

வேலைவழங்குனரின் சுரண்டலும் துஷ்பிரயோகமும் எவற்றைக் குறிக்கும் என்ற விரிவானபட்டியலைப் பார்க்கவும். வேலைவழங்குனரின் சுரண்டலும் துஷ்பிரயோகமும் எவற்றைக் குறிக்கும் என்ற விரிவானபட்டியலைப் பார்க்கவும்.

பின்லாந்தில் செய்யப்படும் தொழில்களில் பின்லாந்தின் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும். அதன் கருத்துப்படி, எந்தவொரு தொழிலாளரும் உதாரணமாக குறைந்த சம்பளத்திலோ அல்லது ஆபத்தான தொழில் நிலைமைகளிலோ அடிபணிந்து தொழிலாற்ற வேண்டியதில்லை.

## உங்களுடைய குடும்பத்தவர்கள், அவர்களது வதிவிடவுரிமையானது பின்லாந்தில் குடும்பம் என்ற அடிப்படையில் இருப்பின்,

வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்தினாலும் சுரண்டலாலும் நீங்கள் அனுமதி நீடிப்பு அல்லது சான்றிதழ் பெற்று இருப்பினும், அவர்களுடைய வதிவிடவுரிமையானது முன்னர் போலவே இருக்கும். பின்னர் அவர்கள் தொடர்ச்சியான வதிவிடவுரிமைக்கு விண்ணப்பிக்கும்போது, குடும்ப அங்கத்தவர்களது வாழ்வாதாரமானது எப்படியும் தொடர்ந்து காக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## எவ்வாறு வதிவிடவுரிமையானது வேலைவழங்குனரின் துஷ்பிரயோகத்திலிருந்தும் மனிதக் கடத்தலாலும் பாதிக்கப்பட்டவருக்குமான வதிவிடவுரிமையிலிருந்து வேறுபடுகிறது?

பின்லாந்தில் வதிவிடவுரிமையும் வேலை செய்யுமுரிமையும் ஏற்கனவே உள்ளவர்கள் வேலை வழங்குனரது துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு வதிவிடவுரிமை அல்லது சான்றிதழ் வழங்கப்படுகிறது. மனிதக் கடத்தலுக்கு உட்பட்ட,ஏற்கனவே பின்லாந்தில் வதிவிடவுரிமை இல்லாத ஒருவராயின் அவருக்கு வதிவிடவுரிமையானது வழங்கப்படலாம். மனிதக் கடத்தலுக்கு உட்பட்டவர்களுக்கான வதிவிடவுரிமை பற்றி மேலும் வாசிக்கவும். மனிதக் கடத்தலுக்கு உட்பட்டவர்களுக்கான வதிவிடவுரிமை

## மேலதிக தவல்களுக்கு

தொழிலில் பிரச்சினைகளா?